பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 12 புதன்கிழமை (28-10-1992) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 335

### புலிகளின் கடும் தாக்குதல்களை அடுத்து

# வடக்கு ராணுவ முகாம்களை மேலும் பலப்படுத்த பணிப்பு!

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, அக்டோபர் 28

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் அதிகரித்து வருவதை அடுத்து வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களை மேலும் பலப்படுத்துமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

அடிக்கடி தாக்குதல்களுக்கு உள்ளாகும் காவலரண்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளைச் சீரமைக்குமாறும் இராணுவத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழையில் நேற்று விமானக் குண்டு வீச்சு!

தெல்லிப்பழைப் பகுதியில் நேற்று பொம்மர்கள் நடத்திய தாக்குதலில் ஒரு வீடு முற்றாக நாசமாகியது. மேலும் ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுப் பகல் 10.40 மணியளவில் தெல்லிப்பழைப் பகுதியை வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் ஒய்கியர் ஒழுங்கைப் பகுதியிலும், ஆனைக்குட்டி ஒழுங்கைப் பகுதியிலும் மொத்தம் நான்கு குண்டுகளை வீசின.

ஒய்கியர் ஒழுங்கைப் பகுதியில் விழுந்த இரு குண்டுகளால் ஒரு வீடு முற்றாக அழிந்தது மேலும் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

ஆனைக்குட்டி ஒழுங்கைப் பகுதியில் விழுந்த மேலும் இரு குண்டுகளில் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

குண்டு வீச்சுக்கு முன்னர் படையினர் அப்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அந்தப் பகுதிகளில் இருந்து ஏற்கனவே மக்கள் இடம்பெயர்ந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

குண்டு வீச்சு நடந்தவேளை ஹெலிகொப்டர் ஒன்றும் அப்பகுதியில் வட்டமிட்டு நோட்டமிட்டது.

[உ-3-68-162]

## மூன்று சிங்கள மீனவர்களை புலிகள் விடுதலை செய்தனர்

யாழ்ப்பாணம், அக். 28

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட சிங்கள மீனவர்களில் மூவர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். திருகோணமலையைச் சேர்ந்த அவர்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பணிமனையில் நேற்று நண்பகல் நடைபெற்ற வைபவத்தில் சம்பந்தப்பட்ட மூன்று சிங்கள மீனவர்களையும் கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு வதிவிடப் பிரதிநிதி திரு ஜோன் சுவாமிகோவிடம் ஒப்படைத்தார்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனின் உத்தரவை அடுத்து மனிதாபிமான ரீதியில் மூன்று மீனவர்களும் விடுதலை செய்யப்படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பருக்கு முன் முடிவுகாண தெரிவுக்குழுவுக்கு அவகாசம்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விஷயத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் ஏதாவது ஒரு நிலைப்பாட்டை எடுக்கும்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அரசு தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

கடந்த 14 ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக் குழு கூடியபோது, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா அரசின் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

எதிர்வரும் டிசம்பருக்கு முன்னர் ஏதாவது ஒரு வழியில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது அலுவல்களை முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் —

நிலைவரத்தை உணர்ந்து அவசர அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. விக்கிரமசிங்கா அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

இதன் அர்த்தம் தெரிவுக்குழு தனது நிலைப்பாட்டை டிசம்பருக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும் என்பதேயாகும் என்று ''சண்டே ரைம்ஸ்'' அரசியல் விமர்சகர் குறிப்பிட்டிருக்கிறார். [உ-எ]

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்றும் நாளையும் கூடுகிறது

கொழும்பு, அக். 28

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்றும் நாளையும் கூடுகிறது.

தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்க கடைசியாகச் சமர்ப்பித்த யோசனைகள் அடங்கிய திட்டம் இக்கூட்டத்தில் அரசியல் கட்சிகளால் மீண்டும் பரிசீலனை செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு கடைசியாகச் [illegible] 14 ஆம் திகதி [illegible] திரு. மங்கள முனசிங்கா தாம் தயாரித்த புதிய யோசனைகள் அடங்கிய திட்டத்தின் பிரதிகளை குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கினார்.

உடனே ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்க இத்திட்டத்தை ஏற்க முடி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் இரு சடலங்கள் கிளாலிப் பகுதியில் ஒதுங்கின

தென்மராட்சி, அக். 28

கிளாலி கடற்பரப்பில் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான மேலும் இருவரின் சடலங்கள் பளை கறுக்காய்ப் பகுதியிலும், ஆனையிறவு உப்பளவு கடற்கரையிலும் கரையொதுங்கியுள்ளன.

கறுக்காய் கரையில் ஒதுங்கிய 21 வயது மதிக்கத்தக்க இளைஞனின் சடலத்துடன் ஜி. சி. ஈ. (உயர்தர) பாடப் புத்தகங்களும் கரையொதுங்கின.

மற்றைய சடலம் இராணுவ முகாமுக்கு அண்டிய பகுதியில் ஒதுங்கியது.

கறுக்காய்க் கரையில் ஒதுங்கிய இளைஞனின் சடலம் அந்த இடத்திலேயே பின்னர் புதைக்கப்பட்டது. (உ-117)

## சாகும்வரை உண்ணாவிரதம் சு. க. பிக்குகள் முஸ்தீபு!

சுதந்திரக்கட்சியின் பிக்குகள் முன்னணி மீது விதிக்கப்பட்ட தடையை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விலக்கிக்கொள்ளாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக சுதந்திரக்கட்சிப் பிக்குகள் முன்னணி அறிவித்துள்ளது.

தடை உத்தரவை விலக்கிக்கொள்வது குறித்து ஒரு வாரத்தினுள் பதில் கிடைக்காவிட்டால் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. வலனே சத்தானந்த தேரர் தெரிவித்திருக்கிறார். [உ-எ]

## ஆயுதங்களுடன் ஓடியோர் தனி ராணுவம் அமைக்கலாம்!

### கொழும்பு அரசியல் விமர்சகர் கருத்து

கொழும்பு, அக். 28

அரசின் ஆயுதப்படைகளில் இருந்து ஆயுதங்களுடன் தப்பி ஓடித் தலைமறைவாகிய ஏழாயிரம் படையினரும் சொந்தமாக சிறிய இராணுவப்படை ஒன்றை அமைக்கமுடியும்.

''சண்டே ஐலண்ட்'' ஆங்கில வார இதழில் கௌடில்யா எழுதும் அரசியல் விமர்சனத்தில் முன்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''தலைமறைவாகச் செல்லும் படையினரின் ஆயுதங்கள் தென்பகுதியில் விற்பனைக்கு வருகின்றன. இவை யாரின் கைகளுக்குப் போய்ச் சேருகின்றன? தென்பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவு திட்டத்தில் சம்பள உயர்வு இல்லை

கொழும்பு, அக். 28

அடுத்த மாதம் ஆறாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அடுத்த ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கு புதிய சம்பள உயர்வு ஏதும் இடம் பெறாது.

அரசாங்க உயர் நிலை அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

சம்பள உயர்வு பற்றிய தனது அறிக்கையை சிறில் சமகே தலைமையிலான சம்பள மற்றும் பதவிகள் ஆணைக்குழு அடுத்த மாதம் சமர்ப்பிக்க இருக்கிறது.

ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவராத காரணத்தால் சம்பள உயர்வு அறிவிப்பு வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெறாது. வரவுசெலவுத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மரநடுகையில் ஈடுபட மக்களுக்கு வேண்டுகோள்

### கன்றுகளை இலகுவில் பெறலாம்

யாழ்ப்பாணம், அக். 28

இம்மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரையான ஒரு வார காலத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மரநடுகை வாரமாகப் பிரகடனப்படுத்தி உள்ளது.

இந்த ஒரு வார காலத்திலும் மரங்களை நடுவதிலும், அவற்றுக்கான பாதுகாப்புக் கூடுகளை அமைப்பதிலும் மக்களை ஈடுபடுமாறு த. பொ. மே. கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. மரநடுகைக்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துமாறு சமூக நல அமைப்புகள் கேட்கப்பட்டுள்ளன.

இந்த ஒரு வார காலத்திலும் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மரநடுகை, கூடு அமைத்தல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**உருவாகும் வாரிசுக்கு உயிலாக மரம் வைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில் கிளின்ரன் 11 வீதத்தால் முன்னணியில்!

வாஷிங்டன், அக். 28 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி புஷ்ஷிலும் பார்க்க ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பில் கிளின்ரன் பதினொரு சதவீதத்தினால் முன்னணியில் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் மூலம் அறிய வந்திருப்பதாக பி.பி.ஸி. நேற்றுத் தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் ஒரு வாரம் இருக்கையில், அமெரிக்காவின் ஸி. என் என். தொலைக் காட்சி நிறுவனமும் 'யு. எஸ். ஏ ருடே' பத்திரிகையும் கூட்டாக நடத்திய கருத்துக் கணிப்பின் படி—

பில் கிளின்ரனுக்கு 42சத வீத ஆதரவும், குடியரசுக் கட்சி வேட்பாளரான ஜோர்ஜ் புஷ்ஷுக்கு, 31சத வீத ஆதரவும் சுயேச்சை வேட்பாளரான தொழில் அதிபர் றொஸ் பெறோவுக்கு 20 சதவீத ஆதரவும் இருப்பதாகவும் அறிய வந்துள்ளது.

தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் பில் கிளின்ரனுக்கான ஆதரவு மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் மாதம் 3ஆம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே.

## சீனி விநியோகம்

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 கிலோ சீனி கட்டுப்பாட்டு விலையில் சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவிருக்கிறது.

தற்சமயம் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு, கப்பலில் வந்த சீனியை பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு வழங்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள் உடனடியாக தமக்கு ஒதுக்கப்பட்ட சீனியைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கந்தசஷ்டி

யாழ்ப்பாணம், அக். 28

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வரும் கந்த சஷ்டி மற்றும் இயந்திர தாபன மகா கும்பாபிஷேக விழாவில் தினமும் மாலை 3 30 மணிக்குப் பூசையும் அதனைத் தொடர்ந்து திரு. ஸ்ரீ தயானனின் கந்தபுராணத் தொடர் சங்கீத கதாப் பிரசங்கமும் இடம்பெறுகின்றது (த)

* * *

யாழ்ப்பாணம், அக். 28

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் கந்தசஷ்டி விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் காலை 9 மணி முதல் இணுவையூர் பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் திருநாவுக்கரசுவின் கந்தபுராண சூரபன்மன் கதை படலம் மற்றும் புராண படன விரிவுரைகள் இடம் பெறும். (த)

## உற்சவம்

யாழ்ப்பாணம், அக். 28

அளவெட்டி கேணிக்கரை ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (த)

## இன்று

குருநகர், அக். 28

யாழ் பிரதான வீதி திருமறைக்கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கு நடைபெறும். திருமதி அருள்நங்கை கருத்துரையை நிகழ்த்துவார்.

(உ-51)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 28

யாழ். மாவட்டத்தில் 92—93 ஆம் ஆண்டிற்கான மரம் நடுகை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்டத்திலுள்ள திணைக்களத் தலைவர்கள் இதில் கலந்து கொள்வர்.

(த-8-100)


## தேசிய கல்வி நிறுவகம்
## பட்டப்பின் கல்வி டிப்ளோமா
### யாழ்ப்பாண நிலையம்.

மேற்படி கற்கைநெறியில் தற்போது பங்குபற்றும் ஆசிரியர்களுக்கான பாடநெறி மொடியூல்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளன.

பங்குபற்றும் ஆசிரியர்கள் அனைவரும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு, யாழ் இந்துக் கல்லூரி நிலையத்தில் இவற்றைத் தவறாது பெற்றுக் கொள்ளவும்.

- கற்கைநெறி இணைப்பாளர்.

(23047)



கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து
## மனோன்மணி அம்பாள்
## ஆலய வழிபடுவோர் மகாசபை

23 - 05 - 1992 பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புத் திட்ட விதிகளின் பிரகாரம், நிர்வாகத்தினர் தெரிவுக்காக மேற்படி சபையின் பொதுக் கூட்டம் 13 - 12 - 1992 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4·00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

அங்கத்தவராகச் சேரும் கடைசி நாள் 15-11-92 ஆகும். இதன் பின் புதிய அங்கத்துவ விண்ணப்பங்கள் 13 - 12 - 92 பொதுக் கூட்டத்தின் பின்னரே ஏற்றுக் கொள்ளப்படும்.

க. தர்மலிங்கம்,
செயலாளர்.

[5525]


## 30ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 18 — 02 — 1928

உதிர்வு: 28 — 09 — 1992

அமரர்
### சின்னத்துரை பாலசுப்பிரமணியம்
[பிரபல வர்த்தகர், உரும்பராய்]

என்றும் எம் நெஞ்சை விட்டகலா எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பாலா மில்ஸ்',
மணியம் வர்த்தக நிலையம்,
பலாலி வீதி, உரும்பராய். [23049]

## மரண அறிவித்தல்
### செல்வநாயகம் மகேஸ்வரி

''மானியம்பதி'', மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சந்தையா செல்வநாயகம் (முன்னாள் பட்டின சபைத் தலைவர், மானிப்பாய் — அரசாங்க ஒப்பந்தகாரர்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம் — தங்கம்மா ஆகியோரின் மகளுமாகிய செல்வநாயகம் மகேஸ்வரி நேற்றுக் காலமானார்.

இவர் பாலச்சந்திரன், பாலகிருஷ்ணன் (மக்கன் லிமிட்டெட், கொழும்பு), இராஜநமசி (லண்டன்), காலஞ்சென்ற சிறீகாந்தன், ரதி, காலஞ்சென்ற ஜெயக்கனி, பத்மினி சாந்தினி, வசந்தரூபன் (சுவிஸ்), தயாபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

தங்கேஸ்வரி, சித்திராதேவி, காலஞ்சென்ற கணேசபிள்ளை (MLT), சுந்தரலிங்கம் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), லலிதாதேவி, செ. தவராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயரட்ணம், டாக்டர் க. இரத்தினசிங்கம் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் —

கலா, சிறிதரன், தயா, செல்வி (கனடா), சுபா, சுதையா, மலர்விழி, மைதிலி தர்சினி (லண்டன்), பார்த்திபன், முரளி, அனுஷா, ராஜீவ், சஞ்சீவ், பிரதீபன், குட்டான், பிரேமரஞ்சன், பிரசாந் (பிரான்ஸ்) துவாரகேஷ், லக்கி, சஜனி, பொபி, விஜயந்தினி, ஜெயந்தினி, செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் இன்று (28-10-92) பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானியம்பதி,
மானிப்பாய். (23055) தகவல்: செ. பாலசந்திரன்


## சுபேன்
### கல்வி நிறுவனம்
(ஞானம் ஸ்ருடியோ அருகாமை)

## A/L கம்பனி
பங்கு வழங்கல்

ஆரம்பம்: 1992-10-29
வியாழன் மாலை-4 மணி

(23051)



## இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்
(S. L A, S)

A/L கணக்கியல் மாணவர்களுக்காக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்படும் நியமங்கள், விளக்கக் குறிப்புகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது. பெற விரும்புவோர் தொடர்பிற்கு.

## SUPER SHINE INSTITUTE
76/2, TEMPLE ROAD,
JAFFNA.

தொகுப்பாசிரியர்: D SAM [23050]


## காணவில்லை

மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ. இ. சிதம்பரநாதக் குருக்களை 26 - 10 - 92 பிற்பகலிலிருந்து காணவில்லை. இவர் மனநோயாளி 40 வயதுடையவர் கறுப்பு நிறம் குடுமி வைத்திருக்கின்றார். சைவக்குருக்கள் என்பதால் பூணூல் அணியவில்லை கண்டவர் உடன் தகவல் தரவும்.

சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்
ஸ்ரீ வீரமாகாளி அம்மன்
கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்

ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம்,
ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி,
நல்லூர். (23057)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



தோற்றம்: 12 — 08 — 1940

மறைவு: 28 — 09 — 1992

### அமரர் ச. பாலசிங்கம்
[உதயன், ஊழியர்]

திதி: 28 — 10 — 1992

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், கலங்கரை விளக்காய் வாழ்ந்த குடும்பத்தின் குல விளக்கே! வேலைக்குச் சென்ற வேளை மின்னாமல் முழங்காமல் காலன் உம்மை அழைத்த வேளை, என்ன நினைத்து எம்மைப் பிரிந்தீர். உள்ளம் உருகி உம்மை நினைந்து கண்ணீர் பெருக கதறி அழுவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகள்.

உம் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

344/1 8ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (கி-3633)

## 5ஆம் ஆண்டு இதய அஞ்சலி



மலர்வு: 30 — 12 — 1930

உதிர்வு: 28 — 10 — 1987

### அமரர் அ. செ. அந்தோனிப்பிள்ளை
[இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞர்,
வன இலாகா, யாழ்ப்பாணம்]

நாம் பிழைத்தாலும் மரித்தாலும் ஆண்டவருக்கென்றே பிழைக்கின்றோம் — மரிக்கிறோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுபாற்சுந்தோர் வீதி,
சாவகச்சேரி. (23015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மாவட்டத்தில்
# தொழிற்பயிற்சி திட்டங்களை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி, அக். 28

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபை, இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி பிரிவுடன் இணைந்து தொழிற் பயிற்சி திட்டங்களை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களை விஸ்தரிப்பதற்கான கூட்டம் ஒன்று அண்மையில் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபைத் தலைவர் ஏ. ஜெ. எம். முஸம்மில் தலைமையில் பத்தரமுல்லை தலைமையகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிப் பிரிவு தலைவர் திரு. எஸ். சிவராஜலிங்கம், வடமாகாண தொழிற்பயிற்சி அதிகாரி திரு. ம. சிவயோகசுந்தரம் உட்பட வேறு பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அதை அடுத்து உடனடியாக இருநூறு இளைஞர், யுவதிகளை தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு, தையல்வேலை, கைவினைஞர் பயிற்சி, பனம் தும்பு தொழிற் பயிற்சி, தாதி உதவியாளர் பயிற்சி, மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர பொறி வலர் பயிற்சி என்பன உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயபீடத்தின் உதவியுடன் விவசாயம் சம்பந்தமான சில பயிற்சிகளை ஆரம்பிக்கவும் முடிவாகியுள்ளது.

இப்பயிற்சி பற்றிய மேலதிக விபரங்களை கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு. சிவராஜலிங்கத்திடம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரம் நடும் விழா

மட்டுவில் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மரம் நடும் விழாவை நடத்தவுள்ளனர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக [illegible] அதிபர் திரு. க. கனகராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கமும், கௌரவ விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திரு. பு. சுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-117)

## குளம் புனரமைப்பு

மாங்குளம் "கல்குவாரி" பகுதியில் அமைந்துள்ள ஆசைப்பிள்ளை குளத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர், போரூட் நிறுவனத்தின் ஆதரவுடன் புனரமைத்துள்ளனர்.

இக்குளத்தின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு 89 ஏக்கர் ஆகும். இவற்றில் 13 ஏக்கர் நிலம் 92/93 காலபோக செய்கைக்காக 13 விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

குளத்தின் புனரமைப்பு வேலைகளை அப்பகுதி விவசாயிகளும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரும் இணைந்து சிரமதான அடிப்படையில் மேற்கொண்டனர். (ஓ)

# எனது சடலத்தின் மீதே அனுராவுக்கு தலைமை பதவி
## சு. க. தலைவி சிறிமா சொல்கிறார்

கொழும்பு, அக். 28

என் சடலத்திற்கு மேலாகச் சென்றே சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை அனுரா பெறலாம்.

சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் பௌத்த குருமார்கள் சிலர் ரோஸ் மீட் பிளேஸில் உள்ள திருமதி பண்டாரநாயக்காவின் வாசஸ்தலத்துக்கு வெளியே கூடியிருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்து அங்கு திருமதி பண்டாரநாயக்கா விரைந்து சென்று நிலைமையை அவதானித்தார்.

கண்ணீர் மல்கியபடி ஆத்திரத்துடன் திருமதி பண்டாரநாயக்கா அங்கு பேசுகையில்— 'எனது மகன் அனுரா என்னை மிரட்ட பல வழிகளைக் கையாளுகின்றார்' — என்று கூறினார்.

'இத்தகைய தந்திரவேலைகள் என்னைத் தடுக்கமாட்டா. இந்த வகையில் அனுரா கட்சியின் தலைமையைப் பெறுவதானால் உயிரற்ற எனது சடலத்தின் மேலாகவே அதனைச் செய்ய முடியும்' — என்றும் அவர் கூறினார். (த-எ)

# பிச்சை எடுத்தால் சிறை!

புதுடில்லி, அக். 28

புதுடில்லியிலும் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் பிச்சை எடுத்தலைத் தடை செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மத்திய நலவாழ்வுத்துறை அமைச்சு இதற்கான மசோதாவைத் தயாரித்துள்ளது.

இதன்படி பிச்சை எடுப்பவர்களைக் குறைந்த பட்சம் 6 மாதம் தொடக்கம் 2 ஆண்டுகள் வரை காவலில் வைத்திருக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஒரு முறை தண்டனை பெற்றவர் மீண்டும் பிச்சை எடுத்தால் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

ஆடிப்பாடிப் பிச்சை எடுத்தல், ஜோஸ்யம் சொல்லுதல், மாய தந்திரங்களைக் காட்டி யாசகம் கேட்பது, பொது இடம் ஒன்றில் ஒரு மனிதரின் உடல் ஊனங்களையோ அல்லது மிருகங்களையோ பகிரங்கமாகக் காட்சிக்கு வைத்து பிச்சை கேட்பது போன்ற பல வகையான பிச்சை கேட்பதையும் இம் மசோதா தடைசெய்கிறது.

சிறு குழந்தைகளை பிச்சை எடுக்க ஈடுபடுத்தும் குற்றத்துக்கு தாயாருக்கும் சேர்த்து 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கவும் இம் மசோதா வகை செய்கிறது. (ஓ-10)


## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.
வெலிங்டன் சந்திக்கருகாமை

### A/L 94 புதிய பிரிவு
### சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ | 8—9 |
| பொருளியல் | — திரு. உதயன் | 9—10 |
| வர்த்தகம் | — திரு. இரமணன் | 7—8 |
| | | 10—11 |
| இந்து நாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் | 11—12 |
| அளவையியல் | — திரு. சயந்தன் | 1—2 |
| தமிழ் | — திரு. தமிழரசா | 8—9 |
| புவியியல் | — திரு. வேலாயுதபிள்ளை | 12—1 |
| அரசியல் | — திரு. பஞ்சு | 7—8 |
| கிறிஸ்தவ நாகரிகம் | — செல்வி சாந்தி | 11—12 |

ஆரம்பம்: 31 - 10 - 1992

குறிப்பு:
1. முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
2. பிரிவு I க்குரிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
3. பிரிவு II புதிய அவலில் இருந்து ஆரம்பமாகும்.

● விபரங்களுக்கு நேரில்.

- நிர்வாகி.

(கி-3730)



உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★
✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச ஆண்டு ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் (04 - 11 - 1992) புதன்கிழமை பகல் 10-30 — 11-30 வரையுள்ள தனு இலக்கினம் கூடிய சுபயோக சுபமுகூர்த்தத்தில் நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சிவகுமார்** (குமார்) அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **நாகலட்சுமி** (சுகந்தி) அவர்களுக்கும்

திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு, திருமதி நற்குணம் குடும்பத்தினர்,
வீரமாணிக்க தேவன்துறை,
அம்மன் கோவிலடி,
மயிலிட்டி.

திருமதி சி. வேலாயுதம்,
முனிகோவிலடி,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

தற்காலம்;
வாரைக்காக் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

இரு வீட்டார் அழைப்பு
(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

(23007)



## உதவி ஐயர் தேவை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு (புதுக்கோவில்)

ஓர் உதவி ஐயர் தேவை. விரும்பியோர் 10-11-92க்கு முன் செயலாளருக்கு விண்ணப்பிக்கவும். மற்றைய விபரங்கள் நேரில்.

பரிபாலன சபையினர்,
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய-சுவாமி கோவில் (புதுக்கோவில்)
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(23044)



## யாழ்ப்பாண பல்கலைக்கழக
## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G. A .Q.; 1st in Com.
B.A. Part-1; B.Com. Part-1

★ பொருளியல்
★ அரசறிவியல்
★ இந்து நாகரிகம்
★ கணக்கியல்
★ முகாமைத்துவம்
★ அளவையியல்

★ மெய்யியல்
★ தமிழ்
★ புவியியல்
★ வர்த்தகம்
★ கணிதம்
★ ஆங்கிலம்

● திறமையான விரிவுரையாளர் குழுவினால் கற்பிக்கப்படும்.
● மேலதிக விபரங்களையும், நேர அட்டவணையையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
● 31 - 10 - 1992 இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். இதன் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

ஆரம்பம்; 01 - 11 - 1992
ஞாயிறு 9-00 மணி

பாரதிதாசன் கல்வி நிறுவனம்,
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3733)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட், சுறிமிளகாய், கரட் விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெறலாம். 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [23042]

### G.C.E. O/L

கடந்த கால வினா-விடை புத்தகம் சகல பாடங்களுக்கும் குறைந்த விலையில் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம் (சி 3726)

### தேவை

அச்சகத்திற்கு கொம்போசிங் பெண்டிங் வேலைகள் தெரிந்த பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். திருவள்ளுவர் அச்சகம், 593 பருத்தித்துறை வீதி, நல்லூர். (யாழ் மாநகரசபை அருகில்) [23036]

### விளாம்பழங்கள் தேவை

நன்றாக பழுத்த விளாம்பழங்கள் கொள்வனவு செய்யப்படும். விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் சரபி உணவு பதனிடல் நிறுவனம், பிரதேசசபை முன் வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-3732)

### தங்குமிடம் தேவை

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவர் தங்குவதற்கு வசதியான இரண்டு அறைகள் வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும். இ. சமீர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3728]

### மணமகள் தேவை

வயது 33, மகம், பாகம் 11, கண்டனில் நிரந்தர பிரஜை. B Sc. கணக்காளனுக்கு வயது 28, உயரம் 5 அடி 4 அங். வரை. கணக்கியல் தராதரமுள்ள, அழகிய, பண்பான குடும்ப மணமகள் வேண்டும். 15 - 11 - 1992 க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 456, C/o உதயன், யாழ்ப்பாணம். [23031]

யாழ். இந்து ஆசிரியருக்கு (வயது 30) படித்த, அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முழு விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு: இல. 04, C/o/பா, உதயன் சேவை நிலையம், கன்னாகம். [5411]

கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய (B.Sc. Hons in Computerizing) வெளிநாட்டில் வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். பட்டதாரி விரும்பத்தக்கது. புகைப்படத்துடனும், முழு விபரத்துடனும் விண்ணப்பிக்கவும். திருமணம் இலங்கையில் செய்து விசாவுடன் அழைத்துச் செல்லப்படும். B Santhiyapillai, (Retired Postmaster) 12 Rajapakse Broadway, Negombo. (23018)

### ENGLISH

"New Method English" for years 6 and 7. Just released Available at leading Book - Sellers Author K Kurunathapillai, Retired Teacher (23032)

### இலவச திருமண சேவை

34 வயது, கத்தோலிக்கம், B.Sc. லண்டனில் தொழில் புரிபவருக்கு ஏற்ற மணமகன் தேவை. U K இல், ஐரோப்பாவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23040)

32 வயது, மிருகசீரிடம், உதயச் செவ்வாய், டென்மார்க்கில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை; பெண்ணை அனுப்புபவர்கள் ஐரோப்பாவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23041)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? ஆமாம் உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். சந்திக்கும் நேரம்: தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை. தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை. த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (22994)

விவாகத்தடைகள், கல்வித் தடைகள், தொழில் தடைகள், குடும்பப் பிரச்சினைகள், திராத கஷ்டங்கள் நீங்க அதிர்ஷ்டம் கைமுக்கிறது சாதகத்துடன் வரவும். பணம் தனியாக பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாணவ விநாயகர் சோதிட நிலையம், ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர். [23046]

### கராட்டே வகுப்புக்கள்

திருநெல்வேலி Y M.H A இல் திங்கள், புதன் மாலை 4-30, சனி, ஞாயிறு காலை 6-00. ஆசிரியர் ச. தர்மராசா, [2ஆம் கறுப்புப் பட்டியும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட செட்டோகான் பிரதிநிதியும்] (23010)

## அரிசி ஆலையில் திருட்டு

அரியாலை, அக். 28

கொழும்புத்துறை மேற்கு, பிரதான வீதியிலுள்ள அரிசி குற்றும் ஆலை ஒன்றில் நேற்று அதிகாலை முன்பக்கக் கதவுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த உடைமைகள் சில திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மோட்டர், பற்றிகள், தராசு படிகள் போன்றவை திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (ஒ-17)

Spoken English With Grammar

By Britto

புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 11 - 1992 (7 மணி)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-3718]

ஓம்

விற்பனையாகிறது!

## சித்திரம் (ஆண்டு-11)

க. பொ. த. (சா.த.) தேர்வுக்கு ஏற்றது.

ஆக்கம்: சி. யசோதரன்

[ஆசிரியர்: சித்திரம் வினா-விடை]

[23045]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## ஆண்டு - 10,9

துரித மீட்டல் வினா - விடை

வகுப்புகள் ஆரம்பம்:

29 - 10 - 1992 (வியாழன்)

மாலை 3-15 மணி.

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. | J.R. குரு. |
| கணிதம் | — | திரு. | ஜெகன். |
| ஆங்கிலம் | — | திரு. | விஸ்வநாதன். |
| சமூகக்கல்வி | — | திரு. | கோபி. |
| தமிழ் | — | திரு. | சிவா. |
| வர்த்தகம் | — | திரு. | கருணாகரன். |
| சமயம் | — | திரு. | கெங்கா. |

★ இப் பிரிவில் அனுமதி பெறுவதின் மூலம் எமது நிறுவனத்தின் கல்வியாண்டு 1993க்கான உங்கள் அனுமதிகளை இப்போதே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். [சி-3723]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 23 — 09 — 1967

விண்ணில்: 01 — 11 — 1989

## திருமதி சாந்தினி இரவீந்திரன்

திதி: 28 — 10 — 1992


கண்ணீரை பரிசாகத் தந்துவிட்டு
தொலைதூரம் போனவளே!
எம் இதயக் கோவிலில் தினம்
உன்னைத் தீபமாய் ஏற்றிப் போற்றிடுவோம்!!
ஜோதியாய் வந்து - என்றென்றும்
பரவசம் தந்திடுவாய்!!!

அன்புக் கணவன்,
பிள்ளைகள்:- பிரியங்கா, பிரிசாந்,
பெற்றோர், சகோதரர்கள்.

600, கண்டி வீதி,
அரியாலை.

(23029)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முத்தையா நல்லையா

தோற்றம்: 12 — 09 — 1929

மறைவு: 28 — 10 — 1989

திடீரென்று வந்தான் காலன்
தீயினில் வெந்தது உடல்
காற்றினில் கலந்து ஆன்மா.

என்றும் தங்களை நினைவு கூரும்;
மனைவி, மகள், மருமகன்.

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[5502]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இனியும் சகிக்கலாமா?

பாடசாலை மாணவருக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த முடிவு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் அரச செயலகத்திற்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம், வடக்கு-கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளில் பயிலும் மாணவருக்கு இலவசச் சீருடைகள் கிடைக்கமாட்டா. அதாவது ஈழத் தமிழ் மாணவர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களுக்கு நாட்டின் ஏனைய மாணவருக்குக் கிடைக்கும் இலவசச் சீருடைகள் கிடைக்கமாட்டா. அரசு அவர்களைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளது. ஈழத் தமிழ் மாணவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது!

அரசின் சமூக நலத் திட்டங்கள் எதுவாயிருப்பினும் அது சகலருக்கும் இன, மத, மொழி பிரதேச வேறுபாடின்றி சமமாக வழங்கப்படவேண்டும் அதுவே நீதி.

அரசானது, பிரசை எவரும் இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அரசியல் அபிப்பிராயம் காரணமாக ஏதேனும் தகுதியீனத்துக்கு உட்படாத வண்ணம் பிரசைகளுக்குச் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்த வேண்டும் — என்று அரசமைப்புச் சட்டத்தில், அரசின் அடிப்படைக் கடமைகள் அத்தியாயத்தின் ஆறாவது பந்தியில் (சரத்து 27 - பந்தி 6) கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஈழத் தமிழ் மாணவருக்கு இலவச சீருடை வழங்குவதில்லை என்ற அரசின் முடிவு தமிழர்களின் ஒத்துழைப்பின்றி சிங்களவரே இயற்றிய அரசமைப்புச் சட்டத்தையே மீறுவதாகும். ஈழத் தமிழ் மாணவர்களை இலங்கைப் பிரசைகள் அல்லர் என்று அரசு கருதுவதாகக் கொள்ளப்பட வேண்டும்

இதனை ஆழமாக ஆராய்ந்தால், ஈழத் தமிழ் மாணவர்களைப் பெற்ற ஈழத் தமிழ்ப் பெற்றோர்களையும், மாணவர்களையும் இலங்கையின் பிரசைகள் அல்லர் என்று புறந்தள்ளுவதாகும். மொத்தத்தில் இது ஈழத் தமிழர்களின் இறைமையை நிராகரிப்பதாகும். அவர்களுக்குள்ள ஆட்சித் தத்துவங்களையே பறிப்பதாகும்.

இது போன்ற புறக்கணிப்புகள், புறந்தள்ளுதல்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் நியாயம் கோரும் காலம் கடந்து போயிற்று. ஈழத் தமிழர் மீதான அடிப்படை உரிமை மீறல்கள், அரசமைப்பு மீறல்கள் ஒன்றா, இரண்டா வரிசை கட்டி எடுத்துச் சொல்ல? எண்ணற்ற பாகுபாடுகள், புறக்கணிப்புகள், ஒதுக்கிவிடுதல்கள் உண்டே! இவற்றை எல்லாம் இன்னும் சகித்துக் கொள்ளுவதா? எத்தனை காலத்துக்கென்று சகித்துக் கொள்வது?

எனவே ஈழத் தமிழர்கள் தமது இறைமையை நிலை நாட்டும், பாதுகாக்கும் பொறுப்பைச் சிங்களவரிடம் தொடர்ந்தும் கொடுக்க இயலாது. தமிழர்கள் தங்கள் இறைமையை — தங்கள் ஆட்சித் தத்துவங்களை — தாமே அனுபவிக்கும் உரிமையை நிலைநாட்ட வேண்டிய கட்டத்துக்கு நிலைமை வந்து விட்டது.

இந்தச் சூழ்நிலையை உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறி அவர்களின் ஆதரவைப் பெற வேண்டும். தமிழர்களின் இறைமையை நிலை நாட்டும் முயற்சியை அங்கீகரிக்கக் கோர வேண்டும். அப்போது தான் தமிழர்கள் தமக்கெனத் தனி அரசைப் பிரகடனம் செய்வதற்கான காலம் கனியும்.

### உரத்தை இறக்க ஏற்பாடு

'கெபர்' விவசாயத்திட்டத்துக்கு தேவையான ஆயிரத்து 408 மெற்றிக் தொன் உரமூடைகளை ஏற்றி வந்த "மரினால்" கப்பலில் இருந்து அவற்றை இறக்கும் வேலைகள் இன்று பருத்தித்துறையில் ஆரம்பமாகவிருக்கின்றன.

# பண்பற்ற "ராகிங்" பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒவ்வாத செயல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் ஒரு தொகுதியினர் இன்று முதல் முறையாக வகுப்புகளுக்குச் செல்கிறார்கள். பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். இவர்களைத் தொடர்ந்து ஏற்கனவே அறிவிக்கப்பட்ட

## தமிழீழ மாணவருக்கு விசேட கடப்பாடு உண்டு

திகதிகளில் ஏனைய தொகுதி மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

பல்கலைக்கழக வகுப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னரே யாழ். பல்கலைக்கழக புதிய மாணவர்கள் ஏற்கனவே 'ராகிங்' எனப்படும் புதியோர் அறிமுகச் சின்டல் சலாட்டா தொல்லைக்கு ஆளாகிவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்த 'ராகிங்' முறை பிரித்தானியப் பல்கலைக்கழகத்திலும், பெரிய கல்வி நிறுவனங்களிலும் காலத்துக்குக் காலம் இடம்பெற்று வருகின்றது இது பிரித்தானியரால் எமது நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு முறையாகும். இந்த அறிமுகம் செய்யும் முறை பல நாடுகளுக்கும் பரவத் தவறவில்லை.

உதாரணமாக ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகங்களில் 'புதியோர் அறிமுகம்' ஒரு சிறந்த வைபவமாகக் கருதப்பட்டு இடம் பெற்று வருகின்றது. சில சமயங்களில் தீவிரமான முறையிலும் அறிமுகச் செயற்பாட்டு முறைகள் நடைபெற்றதாகவும் தகுந்த தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

**மக்களின் மாங்கல்யம்**

ஒரு நாட்டின் பல்கலைக்கழகம் மக்களின் மாங்கல்யமாகும் என்பது அறிஞர் தாகூரின் கருத்து. பல்கலைக்கழகம் மனிதத்துவம், அறம் ஆகிய வாழ்க்கை நெறியை வளர்ப்பதற்கும், பரந்த பொறுமை மனப்பான்மைக்கும், உலக முன்னேற்ற அறிவைப் பயன்படுத்துவதற்கும், கருத்துக்கள் புதியன காணுதலுக்கும், உண்மையைத் தேடலுக்கும் உறுதுணையான நிறுவனம்.

வளாகம் ஒரு கலைக் கோயில் என்ற உணர்வோடு புதிய மாணவர்கள் உட்செல்கிறார்கள். கல்வி என்பது அறிவு, தெளிவு, கருத்து வளர்ச்சி, விடுதலை உணர்வு, அஞ்சாமை, நாட்டுப்பற்று, நினைத்த நோக்கம் என்பன வாகும். இதுவே முழுமை பொருந்திய கல்வியாகும். ஒழுக்க நெறியில் நின்று, வாழ்வு என்னும் நிலையத்தை ஆக்க முயலும் பல்கலைக்கழக வாழ்வே, மாணவர்கள் வாழ்க்கைக்கு ஊற்றாக விளங்குகிறது. இளமைப் பராயத்தில் இவை இணைந்து படைப்பாற்றல் சக்தியாக விளங்குகிறது. இவ்வாறு இணையும் படைப்பாற்றல் சக்தியால் மாணவர்கள் மனதில் சகோதர நேயம் வரை ஏதுக்கள் எழுகின்றன. ஒரு நாடு கவலையுறும்போது அக்கவலையைத் தீர்க்கும் ஆற்றல் இளைஞர்களுக்கு உண்டு என்பதை பலரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

சிரேஷ்ட மாணவர்கள், புதிய மாணவர்களின் மனதில் புதிய சூழலில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு முன்னோடியாக அடியெடுத்துக் கொடுப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் 'தூரத்திலிருந்து வந்து விடுதிகளில் தங்குபவர்கள் மனதில் வீடு பற்றிய சிந்தனை (Home Sick)யால் ஏற்படும் கவலையைப் போக்குவதற்கும், பல சிரேஷ்ட மாணவர்களுடன் அந்நியோன்யமாகப் பழகுவதற்கும் அரிய வாய்ப்புக்களை "புதியோர் அறிமுகம்" ஏற்படுத்துகிறது.

**தமிழீழ மாணவர் பொறுப்பு**

இன்றைய சமுதாயம் முந்திய நூற்றாண்டுகளை விட மிக வேகமாக மாறிக் கொண்டு வருகிறது எனவே தேவைக்கேற்ப மாணவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தேவை இன்று வலுப்பெறுகிறது. குறிப்பாகத் தமிழீழ மாணவர்கள் தமிழ் ஈழத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டு, ஆக்க பூர்வமான அறிவைத் திரட்டி மதிப்பான தகுதியுடன் வெளியேற வேண்டிய கடப்பாடு உண்டு. வளாகத்தில் செலவழிக்கும் ஆண்டுகள் தமது சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள பொறுப்புக்களை உணர்ந்து தம்மைத் தயார்படுத்திக்கொள்ளும் பொற்காலமாகக் கருத வேண்டும்.

வளாகக் கூட்டு வாழ்விலே, அதாவது வளாகத்திலுள்ள பல்வேறு அமைப்புகளோடு தொடர்பை ஏற்படுத்தி, பங்கு கொண்டு, புதிய அனுபவங்களையும் அறிவையும் விருத்தி செய்ய வேண்டும். மேலும் ஆராய்ச்சி, திறனாய்வு போன்றவற்றில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு மிளிரவேண்டும்.

இக்காலத்தில் போதனை நுட்பங்களிலும், கற்றலிலும் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மாணவர்கள் தமது உள்ளார்ந்த திறமைகளை தெரிந்து உயர்ச்சியடைய, ஆளுமையை வளர்த்துக் கொள்ள முயற்சி கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒருவிதத்தினரே அனுமதி பெறுகிறார்கள். எனவே இவர்கள் இலட்சிய இதயமும், உயர்ந்த உள்ளமும், தற்துணிவும் தன்னம்பிக்கையும் கொண்ட பட்டதாரிகளாக வெளிவரவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு உட்செல்லவேண்டும்.

எனவே பண்டைக்காலம் தொட்டு நிலவிவருகின்ற எமது விருந்தோம்பல் முறை அந்நிய முறைகளோடு கலந்து ஆபத்தையும், திருப்தியையும் ஏற்படுத்தாமல் நல்ல சிநேகபூர்வமான இணைப்பை, விளக்கத்தை, உற்சாகத்தை ஏற்படுத்தும் விதத்தில் பல்கலைக்கழக "புதியோர் அறிமுகம்" அமைய வேண்டும்.

புதிய மாணவர்கள் பல்கலைக்கழக வாழ்க்கை குறித்து பயம் கொள்ளவோ அல்லது உளரீதியில் பாதிக்க வழி செய்யும் விதத்திலோ அவர்களை அநாகரீகமான பண்பற்ற இம்சைகளுக்கு, உடலியல் உபாதைகளுக்கு ஆளாக்கித் தொல்லைகொடுக்கும் 'புதியோர் அறிமுகம்' (ராகிங்) தவிர்க்கப்பட வேண்டும். ★

— பி. கே. ஆர் இரத்தினம் —

# முஸ்லிம் இளைஞர்கள் ராணுவத்தில் சேர வேண்டும்

## சபாநாயகர் முகம்மது அழைப்பு

கொழும்பு, அக். 28

இராணுவத்தில் சேருவதற்கு முஸ்லிம் இளைஞர்கள் முன்வரவேண்டும்.

சபாநாயகர் எம். எச். முஹம்மது ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் என்ற புதிய அரசியல் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் இளைஞர் இராணுவத்தில் இணைந்து இராணுவத்துக்கு உதவுவதோடு, சமூகத்தையும் நாட்டையும் பாதுகாக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஒ-எ)

# முஸ்லிம்கள் புனிதபோரை ஆரம்பிக்கும் நிலையாம்!

## அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, அக். 28

புனிதப்போர் (ஜிஹாத்) ஒன்றை ஆரம்பிக்கக் கூடிய நிலவரம் தற்போது உருவாகியிருப்பதாக நாட்டில் உள்ள இஸ்லாமிய மதகுருமார்கள் அங்கம் வகிக்கும் உயர் அமைப்பான ஜமைத்துல் உலமா அபிப்பிராயப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் இதனைத் தெரிவித்தார்.

"மத விஷயங்களில் 'ஜமைத்துல் உலமா' இறுதித்தீர்ப்பு வழங்குகிறது. புனிதயுத்தத்தை (ஜிஹாத்) ஆரம்பிக்கும்படி ஜெமைத்துல் உலமா அழைக்கையுடன், நாம் அந்த ஆணைக்குக் கட்டுப்படுவோம்." — என்றும் ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

எனினும்—

இந்தக் கட்டத்தில் புனித யுத்தம் ஒன்றை தாங்கும் நிலையில் நாடு இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## முஸ்லிம் ராணுவப் பிரிவு:

# அஷ்ரப்பின் கோரிக்கைக்கு பிரேமதாஸா மௌனம்

ஸ்ரீலங்கா இராணுவத்தில் முஸ்லிம்களுக்கு எனத் தனி "ரெஜிமென்ட்" அமைக்கப்பட வேண்டும் என்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கை குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா தெளிவான பதில் எதையும் அளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இத்தகவலை கொழும்புப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் வெளியிட்டார்.

எனினும் —

முஸ்லிம்களையும் அப்பாவி குடிமக்களையும் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க தற்போது உள்ள சட்டங்களின் கீழ் விசேட பரா இராணுவப் பிரிவுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார் என்றும் ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

பொலன்னறுவைப் படுகொலை பற்றி விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பது குறித்து தாம் திருப்தியடையவில்லை என்றும் —

விசாரணைக் குழு நியமிக்கப்படுவது வழமையான ஒன்றாகி விட்டது என்றும்—

இக் குழுக்களின் அறிக்கை வெளியிடப்படுவது இல்லை என்றும் அவர் கூறினார். (உ-எ)

## 'கறுப்பு வெள்ளி' வன்செயல்:

# அவசரகால சட்ட விதிகளின் கீழ் கைதானோர் மீது நடவடிக்கை

'கறுப்பு வெள்ளி' அன்று கொழும்பில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் மீது அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சிறில் ரணதுங்க தம்மை இது தொடர்பாகச் சந்தித்த தமிழ்க் குழு ஒன்றின் பிரதிநிதிகளிடம் இந்த உறுதி மொழியை அளித்தார்.

கொழும்பில் இனக்குரோதத்தைத் தூண்டக் கூடிய விதத்தில் திட்டமிட்ட கோஷ்டி ஒன்று இவ்வன்செயல்களின் பின்னணியில் இருந்து செயல்பட்டதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர். சம்பந்தப்பட்டோர் இது பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலீஸார் 32பேரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் என்றும் கொழும்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### நாடாளுமன்றத் ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவித்தார். திட்டத்தில் கூறப்பட்டிருந்த சில விஷயங்களையும் அமைச்சர் சாகுல் ஹமீதுவும் ஆட்சேபித்தார்.

அக்கட்டத்தில் தமிழ் எம்.பி ஒருவர், ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா கூறியது அவர்கள் கருத்தா அல்லது அவர் சார்ந்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் கருத்தா என்று வினவினார்.

அதற்கு திரு. விக்கிரமசிங்கா தான் கூறியது தனது தனிப்பட்ட கருத்து என்றார். அதற்கு அந்தத் தமிழ் எம். பி தனிப்பட்ட அபிப்பிராயங்கள் கணக்கில் எடுக்கப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

அத்துடன் தெரிவுக்குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை —

மங்கள முனசிங்காவின் யோசனைகளை ஏழு தமிழ்க் கட்சிகளும் ஏகோபித்த முறையில் நிராகரித்து விட்டன என்பதும் —

இது தொடர்பாக அந்தக் கட்சிகள், யோசனைகள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை எழுத்து மூலம் மங்கள முனசிங்காவுக்கு அனுப்பி வைத்திருப்பதும் தெரிந்ததே. (உ-எ)

### வடக்கு ராணுவ...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மன்னாரில் படையினரின் முன்னணி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்களைச் சுட்டிக்காட்டிய இராணுவ அதிகாரி ஒருவர், அப்பகுதியில் அண்மையில் புலிகள் நடத்திய தாக்குதல் நுட்பம் நிறைந்ததாக இருந்ததாகவும்—

முந்திய தாக்குதல்களை விட மிக வலிமை உள்ளதாக இருந்ததாகவும்—

இதனால் புதிய பாதுகாப்புத் திட்டம் வகுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும்— தெரிவித்தார்;

கடந்த 10 நாட்களில் மன்னாரில் படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 15 படையினர்வரை உயிரிழந்ததாகவும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார். (உ-10)

### வரவு செலவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்ட மதிப்பீடுகள் ஏற்கனவே அச்சிடப்பட்டு விட்டன.

பின்னர் அறிவிக்கப்படும் சம்பள அதிகரிப்பை அரச ஊழியர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக துணை மதிப்பீடு ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கடந்த காலங்களைப் போல் அன்றி சிபார்சு செய்யப்பட்ட சம்பள உயர்வை அரச துறையில் உள்ள உயர்நிலை அதிகாரிகள் தொடக்கம் கீழ் நிலை ஊழியர்கள் வரை பெறுவார்கள். தனியார் துறை ஊழியருக்கும் இச்சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று தனியார் துறையும் கேட்கப்படும்; என்றும் உயர் அதிகாரி கூறினார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாக வரும் மாணவரை

# உளவியல் ரீதியாக பாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது

### யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் முடிவு

யாழ்ப்பாணம், அக். 28

பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக அனுமதி பெற்று வரும் மாணவர்களை வரவேற்று ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் செய்ய வேண்டும். அவர்களை உளவியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ பாதிக்கும் எவ்வித செயல்களிலும் ஈடுபடலாகாது.

அத்தகைய செயல்களில் ஈடுபடும் மாணவர் மீது பல்கலைக்கழக நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைக்கு கலைப்பீட மாணவர் ஒன்றியம் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

இவ்வாறு கைலாசபதி கலையரங்கில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வெளியிலேயே 'ராகிங்' சம்பவங்கள் நடந்தால், அவற்றுக்கும் பல்கலைக்கழக மாணவருக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதக்கூடாது. வெளிச்சக்திகளே செய்துவிட்டு பல்கலைக்கழக மாணவர் தலையில் போட முயலும் சாத்தியம் உண்டென்பதை மறந்துவிடக்கூடாது— என்று கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் நேற்றைய உதயனில் வெளியான ''யாழ். பல்கலை புதிய மாணவருக்கு வகுப்பு ஆரம்பமாகும் முன்னரே ராகிங்'' என்ற செய்தி குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. செய்திக்குக் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். ஆனால் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளால் உள்வாரி மாணவர்கள் பாதிப்படைவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட வேண்டும் — என்றவாறு மற்றொரு தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானங்களை துணைவேந்தரிடமும், கலைப்பீடாதிபதியுடமும் கையளிப்பது எனவும் உரிய நடவடிக்கை எடுத்த தவறும் பட்சத்தில் மேற்கொண்டு என்ன செய்வது என்பது குறித்துப் பின்னர் முடிவு செய்வது எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-162)

## மூன்று சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதாகத் திரு. மறவன் தெரிவித்தார்.

இவர்களுடன் கைதான மற்றும் மூன்று மீனவர்கள் தலைவரின் உத்தரவின் பேரில் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதையும் திரு. மறவன் ஞாபகமூட்டினார்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் தொழிலுக்குச் செல்லும் தமிழ் மீனவர்களை சுட்டுக் கொல்கிறார்கள். கைது செய்கிறார்கள் ஆனால் கைது செய்தவர்களை இன்னும் விடுதலை செய்யவில்லை—

ஆனால் நாம் கைது செய்த சிங்கள மீனவர்களை விசாரித்து முடிந்ததும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்கிறோம். தனைச் சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்— என்றும் திரு. மறவன் கூறினார்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்று சிங்கள மீனவர்களையும் 24 மணி நேரத்தில் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

அமரதாச சந்திரசேனா (வயது 28) சுமிதபால பிறின்ஸ் பியந்தா (24 வயது), விஜய் சுமித் (18 வயது) ஆகிய மூவருமே நேற்று விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் திருகோணமலை நெல்சன்புரவைச் சேர்ந்தவர்கள்.

''யாழ்ப்பாணத்தில் மக்கள் தற்போது எதிர்நோக்கும் கஷ்டங்களை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். இந்நிலை குறித்து எமது மக்களுக்குத் தெரியப்படுத்துவோம். அரசாங்க அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறுவோம். எம்மைக் காவலில் வைத்திருந்த போது எவ்வித குறையும் இல்லாமல் விடுதலைப் புலிகள் எம்மை நன்கு கவனித்தனர்.'' — என்று நான்கு பிள்ளைகளின் தந்தையுமான சந்திரசேன பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். (அ-17)

## மரம் நடுகை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய பணிகளைச் செய்வதிலும், மரநடுகையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதிலும் செலவிடுமாறும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரநடுகைக்குத்தேவையான மரக்கன்றுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் நடுவப் பணியகத்திலும், மாவட்ட, கோட்ட, வட்டச் செயலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மர நடுகை வாரம் குறித்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்—

தமிழீழத்தின் வளங்களைக் காத்து நிற்கும் மரங்களை அழிப்பதைத் தவிர்ப்பதும் மரங்களை நட்டுப் பராமரித்து வளர்க்க வேண்டியதும் இன்றைய சமூகத்தின் கடமையாகும். யாழ். குடாநாட்டில் விறகுத் தேவைக்காக மாத்திரம் அளவுக்கதிகமான மரங்கள் தறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே நேரம் மர நடுகை குறித்த விதத்தில் கூட நடைபெறுவதில்லை.

இவ்வாறு மரங்கள் தறிக்கப்படுவதானால் யாழ். மாவட்டத்தில் சூழலின் சமச்சீர் கெட்டு பாரிய பின் விளைவுகளை எமது எதிர்கால சந்ததிக்கு உண்டுபண்ணும் ... என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ். கல்வித் திணைக்களம் யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் — 19 வயதுப் பிரிவில் — நான்கு ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

**சென். ஜோன்ஸில்**

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்து அணியை எதிர்த்து சென். ஹென்றீஸ் அணியும், வரணி மகா வி. அணியை எதிர்த்து மானிப்பாய் இந்து அணியும் மோதும்.

**மட்டுவிலில்**

மட்டுவில் சந்திரபுர. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் அக்கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி அணியும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் மோதும். (உ)

# நில அளவையாளர்கள் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், அக். 28

நில அளவையை மேற்கொள்ள விரும்பும் அனுமதிப் பத்திரம் பெற்ற, அனுமதிப் பத்திரம் பெறாமல் பயிற்சி பெற்ற நில அளவையாளர்கள் மற்றும் வரைபட வரைஞர்களுக்கான கலந்துரையாடல்களை தமிழீழ காவல் துறை நாளை முதல் நடத்தவிருக்கிறது.

தவிப்பட்டோரின் காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளுக்கான முன் முயற்சியாகவே இக்கலந்துரையாடல்கள் நடத்தப்படவிருக்கின்றன.

நாளை யாழ்ப்பாணத்தில் காலை 9 மணிக்கும், சங்கானையில் மாலை 3 மணிக்கும்— நாளை மறுதினம் கன்னாகத்தில் காலை 9 மணிக்கும், கோப்பாயில் மாலை 3 மணிக்கும் —

எதிர் வரும் 31 ஆம் திகதி வல்வெட்டியில் காலை 9 மணிக்கும், பருத்தித்துறையில் மாலை 3 மணிக்கும் —

அடுத்த மாதம் முதலாம் திகதி சாவகச்சேரியில் காலை 9 மணிக்கும், பளையில் மாலை 3 மணிக்கும் —

கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்தார். (உ-8)

## ஆயுதங்களுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரவாதிகளிடமா? ஆயுதக் குழுக்களிடமா? பெரிய அளவிலான குழுக்களிடமா?

இராணுவமயப்படுத்தல் நடவடிக்கை மாபியா பாணி ஆயுதக் குழுக்களை உற்பத்தி செய்யும் என்பதையும் கூறி வைக்கின்றேன்!! —இப்படி அவ்விமர்சனத்தில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் 1993 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினமாக ஆயிரத்து 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு தேசம் தமது பிரதேச ஒருமைப்பாட்டுக்கான அச்சுறுத்தலை இலேசானதாக எடுத்துக்கொள்ள முடியாது. மூன்றாம் உலக நாடுகள் பல இன்று சிதறுண்டு போவதைக் காணமுடிகிறது. புதிய உலக ஒழுங்கின் அப்பட்டமான உண்மை இதுவாகும்— என்றும் அவ்விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# மற்றொரு அமைச்சர் ராஜினாமா!

பெங்களூர், அக். 28

கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸ் அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்த அமைச்சர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

திரு. வீரப்ப மொய்லி என்ற அமைச்சர் தனது ராஜினாமாக் கடிதத்தை நேற்று சமர்ப்பித்தார். (உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கோபாலபிள்ளை சுந்தரலட்சுமி

புளியங்கூடலைச் சேர்ந்த கோபாலபிள்ளை சுந்தரலட்சுமி 27-10-92இல் காலமாகிவிட்டார். அன்னார் முத்துக்கிண்ணர் கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், வேதசிரோன்மணி, விஜயசிரோன்மணி, ஸ்ரீலசிரோன்மணி வசந்தசிரோன்மணி, வசந்தராசன், ஞானசிரோன்மணி, வரதசிரோன்மணி, குமுதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியதர்மபாலன், குணலிங்கம், சண்முகரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜேன், நியுந்தன், புகழ்யன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 196, கச்சேரி நல்லூர் வீதியில் (நாவலர் வீதிச் சந்தி) உள்ள இல்லத்தில் 28-10-92 புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

196, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தம்பையா சண்முகம்

(23052)

## வைரமுத்து இலக்மணேஸ்வரன்

[பவா]

(அம்பனை முருகன் கமக் கவஞ்சிய உரிமையாளர்)

கன்னாலையைச் சேர்ந்த வைரமுத்து இலக்மணேஸ்வரன் 23-10-1992இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கா. வைரமுத்து, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், சொதிலவதியம்மாள் (இளைப்பாறிய ஆசிரியை), கனகசபாபதி (வ. பி. போ. ச. கோண்டாவில்), அகிலாண்டநாயகி, இராஜேஸ்வரி (இறைவரித் திணைக்களம்), கமலாம்பிகை, யோகேஸ்வரன் (முருகன் கமக் கவஞ்சியம்), கோகநாயகி (கணக்குப் பதிவாளர்), விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, கார்த்திகேயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளையதம்பி (சர்வோதயம்), பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், ஏரம்பமூர்த்தி, கதிர்காமத்தம்பி (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபாதினி, அஜந்தன், அரவிந்தன், ஆனந்தன், ஜானி, தயானி, ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-10-1992 மு. ப. 11.00 மணியளவில் கைதடி மேற்கில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

கைதடி மேற்கு, கைதடி.

வைரமுத்து - சின்னத்தங்கம் (தாய்)

(5528)

## திருமதி பூமணி செபரட்டினம்

யாழ்ப்பாணம் கண்டுக்குளியில் வசித்த திருமதி பூமணி செபரட்டினம் அவுஸ்திரேலியாவில் 20-10-92இல் காலமானார். இவர் திரு செபரட்டினத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்), அன்பு மனைவியும், மனோகரன் பெற்றி வினோதினி, வதனி றதி, தயானி, ரோனி, லியானி ஆகியோரின் பாசமிக்க தாயாரும், யசி, ஜெகேந்திரன், பிறியாந்தி, ஜெயராம், சூரியகுமார் ஆகியோரின் அருமைமிக்க மாமியாரும், ருக்மணி, அந்தோனிப்பிள்ளை, அருட் திரு. ராசநாயகம் (மதுரை) ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார், நல்லடக்கம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

தகவல்:

திருமதி ரெபினம்மா நிக்கிலஸ் (சிறிய தாய்)

(கி/3631)


## யாழ். இந்து மகளிர் கல்லூரி
## 1993 - ஆண்டு 6 அனுமதித் தேர்விற்கான போட்டிப் பரீட்சை

மேற்படி பரீட்சை 14-11-92 இல் நடைபெறும். பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் கல்லூரி அலுவலகத்தில் ரூபா 40/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 02 - 11 - 92

தி. நாகராசா
அதிபர்

(கி/3634)



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆண்டு 6 அனுமதி பெறுவதற்கான
## பிரவேசப் பரீட்சை-1993

01. இப்பரீட்சை 15-11-1992 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
02. தற்போது ஆண்டு 5இல் கல்வி கற்கும், 01-02-1982க்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 30/- செலுத்தி 30-10-92 வெள்ளிக்கிழமை தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
04 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இக் கல்லூரியில் நேரில் 06-11-92 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கையளிக்கப்படல் வேண்டும். (06-11-92க்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)
05 இக் கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் 11-11-92 புதன்கிழமை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1992-10-27

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

(C/3735)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி ... இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org